**மக்காச்சோளத்திற்கான விலை முன்னறிவிப்பு**

அமெரிக்கா, சீனா, பிரேசில், அர்ஜென்டினா, உக்ரைன் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் மக்காச்சோளம் பெருவாரியாக பயிரிடப்படுகிறது. இந்த நாடுகள் இணைந்து உலக மொத்த மக்காச்சோள உற்பத்தியில் 74.86 சதவீதம் பங்களிக்கிறது. மக்காச்சோளம் உற்பத்தி செய்யும் நாடுகளில், இந்தியா பரப்பளவில் நான்காவது இடத்திலும் உற்பத்தியில் ஆறாவது இடத்திலும் உள்ளது. இந்தியா உலக மக்காச்சோள பரப்பளவில் நான்கு சதவீதமும் மொத்த உற்பத்தியில் இரண்டு சதவீதமும் பங்களிக்கிறது. வேளாண் கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் படி, இந்தியாவில் 2020-21-ஆம் ஆண்டில் 9.9 மில்லியன் எக்டர் பரப்பளவில் 30 மில்லியன் டன்கள் மக்காச்சோளம உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரேசில், அர்ஜென்டினா மற்றும் உக்ரைன் ஆகியவை மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடுகளாகும். இந்தியா 2019-20 ஆம் ஆண்டு மக்காச்சோளத்தை நேபாளம், பங்களாதேஷ், மியான்மர், பாகிஸ்தான் மற்றும் பூட்டான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இந்தியா மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்வதுமட்டுமின்றி நிகர இறக்குமதியாளரகவும் திகழ்கிறது. இதில் 41 சதவீத மக்காச்சோளம் மியான்மரிலிருந்து மட்டுமே இறக்குமதி செய்யப்படுகிறது.

இந்தியாவின் மொத்த மக்காச்சோள உற்பத்தியில், கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா, பீகார், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் இணைந்து 62 சதவீதத்தைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் 2019-20-ஆம் ஆண்டில் 3.35 இலட்சம் எக்டர் பரப்பளவில் 2.47 மில்லியன் டன்கள் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்பட்டது

தமிழ்நாட்டில் சேலம், திண்டுக்கல், நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் மக்கசோளம் பயிரிடப்படுகிறது. வர்த்தக மூலங்களின்படி, தமிழகத்தில் கடந்த ஆண்டை விட மக்காச்சோளத்தின் பரப்பளவு மற்றும் உற்பத்தி அதிகரித்துள்ளது. மற்ற மாநிலங்களிலிருந்து வரும் வரத்து மூலம் தமிழகத்தின் மக்காச்சோளத் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. தமிழக சந்தைக்கு கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் பீகார் ஆகிய

மாநிலங்களிலிருந்து மக்காச்சோள வரத்தானது நவம்பர் முதல் பிப்ரவரி வரை இருக்கிறது.

இச்சூழ்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம் கடந்த 16 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய மக்காச்சோளத்தின் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், நல்ல தரமான மக்காச்சோளத்தின் விலையானது (ஜனவரி 2022 வரை) குவிண்டாலுக்கு **ரூ.1700 முதல் ரூ.1800** வரை இருக்குமெனக் கணித்துள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய ஆலோசனையின் அடிப்படையில், விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.


**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயமுத்தூர்-641 003

தொலைபேசி- 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்

சிறு தானிய துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் - 641 003.

தொலைபேசி எண் :- 0422-2450507

## Price Forecast for Maize

USA, China, Brazil, Argentina, Ukraine and India are the major maize growing countries in the World. These Countries together contribute 74.86 per cent of world maize production. Among the maize growing countries, India ranks 4$^{th}$ in area and 6$^{th}$ in production, representing around 4 per cent of the world maize area and 2 per cent of total production. According to Ministry of Agriculture, Cooperation and Farmers Welfare, India produced 30 million tonnes in an area of 9.9 Million hectares in 2020-21. USA, Brazil, Argentina and Ukraine are the major exporting nations of maize.

The major export destinations of Indian maize (2019-20) are Nepal, Bangladesh, Myanmar, Pakistan and Bhutan. India is a net importer of maize in which 41 per cent of maize is imported from Myanmar followed by Ukraine.

Karnataka, Andhra Pradesh, Telangana, Bihar, Maharastra and Tamilnadu together accounted for 62 percent of the total maize production in India. In Tamil Nadu, maize is cultivated in an area of 3.35 lakh hectare with 2.47million tonnes of production during 2019-20. The major maize growing districts of Tamil Nadu are Salem, Dindigul, Namakkal, Pudukottai, Tiruppur, Villuppuram, Perambalur and Ariyalur.

According to the trade sources, area and production of maize in Tamil Nadu has increased compared to the previous year. Demand for maize in Tamil Nadu is partially met through inflow from other states. Karnataka, Andhra Pradesh and Bihar are the major states supplying maize to Tamil Nadu during November to February.

Under these circumstances, TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analyzed the past 16 year historical prices that prevailed in Udumalpet Regulated Market for Maize. As per the results of the time series analysis, the farm gate price of good quality Maize during harvest (January 2022) would be around Rs. **1700-1800** per quintal. Hence, the farmers are advised to take appropriate selling decision.

***For Marketing details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

***For Technical Details please contact:***

*Professor and Head*
*Department of Millets*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore-641003*
*Phone: 0422-2450507*